முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்

அசல் வழக்கு எண். 229/2018

பி.வா.சா.2–மனோகரி க/பெ ராகவன்

26–6–2023 சாட்சி அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1) கிரய ஆவணத்தின் மூலம் வாதி தான் இறந்து போன ராகவனுக்கு வாரிசுகள் என தாவாவில் சொல்லி உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். பி.வா.சா.ஆ.18 ல் சொல்லப்பட்டுள்ள வரி ரசீதின் எண் விவரங்கள் தெரியுமா என்றால் தெரியாது. எத்தனை வீடுகளுக்கு வரி செலுத்தப்பட்டுள்ளது என்றால் 2 வீடுகளுக்கு கட்டப்பட்டுள்ளது. 2 வீட்டில் ஒரு வீட்டில் நானும் இன்னொரு வீட்டில் 3ம் வாதி தனலட்சுமியும் குடியிருந்து வருகிறோம் என்றால் தவறு. அதனால் தான் வரி ரசீது எண் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல.

2) பி.வா.சா.ஆ.18, 19, 20, ஆகியவற்றில் ரசீதுக்கான தொகையை நான் செலுத்தியதாக குறிப்புகள் காணப்படவில்லை என்றால் சரியல்ல. ராகவன் தான் இறந்த பிறகு நான் செலுத்துகிறேன். மின் கட்டண ரசீதின்படி மின் இணைப்பு எண் என்றால் பழைய எண் 140, 141 புது எண் தெரியாது. பழைய எண்ணுக்குரிய ரசீதுகளை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.21ன்படி என்னுடைய கூட்டுறவு வங்கி கணக்கு எண் வேறு, ராகவனின் கணக்கு எண் வேறு என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.23ன்படி நான் தொகை செலுத்தியதாக குறிப்புகள் காணப்படவில்லை என்றால் சரியல்ல. என் மருமகன் செலுத்தினார்.

3) பி.வா.சா.ஆ.25 ஆவணத்திற்கும் இந்த வழக்கு பரிகாரத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ராகவனை குஞ்சு என்ற மற்றொரு பெயரில் அழைப்பார்கள் என்றால் கேரளாவில் அவரின் பெற்றோர்கள் அழைப்பார்கள். 2 பெயர்களும் ஒரே நபர் தான் என்றால் ஆமாம். தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் ராகவனின் இறப்புச் சான்றிதழ் என்றால் தவறு. இறப்புச் சான்றிதழ் உண்மையான ஆவணம் அதை மறைத்து சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. தற்போது

என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் 26.4.2018 ம் தேதி திருப்பூர் மாநகராட்சியால் கொடுக்கப்பட்ட இடுகாட்டு ரசீது என்றால் சரிதான். அது **வா.சா.ஆ.14** ஆகும்.

அரசு தரப்பில் முறையீடு இல்லை. குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

Sd/- K.R.Kannan
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.